**கவனிக்க.** - 27.03.2020 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகையின் பகுதி I : தொகுதி II (அ) மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.**- COVID - 19 தொற்று நோய் காரணமாக 2020.04.03 ஆந் திகதிய 2170 ஆம் இலக்க, 2020.04.09 ஆந் திகதிய 2171 ஆம் இலக்க, 2020.04.17 ஆந் திகதிய 2172 ஆம் இலக்க 2020.04.24 ஆந் திகதிய 2173 ஆம் இலக்க, 2020.04.30 ஆந் திகதிய 2174 ஆம் இலக்க, 2020.05.06 ஆந் திகதிய 2175 ஆம் இலக்க 2020.05.15 ஆந் திகதிய 2176 மற்றும் 2020.05.22 இற்கு 2177 இலக்க வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட வில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2178 - 2020 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2020.05.29

*2178 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 969 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 968 | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2020, யூன் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விசேட அறிவித்தல்**

**கவனிக்க.-** COVID - *19 தொற்று நோய் காரணமாக நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்ட தனிமைப் படுத்திக் காண்காணித்தல் நடவடிக்கையினால் அரசாங்க மற்றும் தனியார் துறைசார்ந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டமையினால் 2020.03.16 முதல் 2020.05.11 ஆந் திகதி வரை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அறிவித்தல்கள் எதுவும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்படவில்லை.*

---

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்திற்கான, பொது கல்லறை மற்றும் தனியார் கல்லறை பற்றிய கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தில் 5(1) இன் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவில் 11 ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்திற்கான பொது கல்லறைகள் மற்றும் தனியார் கல்லறைகள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் பிரிவின் படி, வடமேல் மாகாண சபையின் கௌரவ ஆளுநர் அஹமட் ஜமால்தீன் மொஹொமட் முசாம்மில் ஆகிய நான், வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் குருநாகல் மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள கீழ்க் காணப்படும் அட்டவணையினால் விபரிக்கப்படுகின்ற கல்லறையினை, பிணங்களை புதைத்தல் அல்லது தகனம் செய்வதற்காக பொது கல்லறையாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

அஹமட் ஜமால்தீன் மொஹொமட் முசாம்மில்,
ஆளுநர்,
வடமேல் மாகாணம்.

*2020, பெப்புருவரி 17.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் வேஉடவில்லி ஹத்பத்துவை திரகம 10 கோரளையில் குருநாகல் மாநகரத்தில் மடமேகமையில் அமைந்துள்ள "கொடுவே ஹேன" பெயரை உடைய காணி 2011.06.27 ஆந் திகதி மீண்டும் அளந்து, அதிகாரமுடைய நில அளயையாளர் கோலித தசநாயக்கவினால் அளந்து அமைக்கப்பட்ட 1348 ஏ இலக்கத்திற்கான திட்டத்தினை முறையே துண்டு இலக்கம் 01 வடக்கிற்கு நீர்கொழும்பு வீதி மற்றும் நீர்கொழும்பு வீதியினால் கொழும்பு வீதிக்கு செல்கின்ற மாநகர சபை பாதையும், கிழக்கிற்கு நீர்கொழும்பு வீதியினால் கொழும்பு வீதிக்கு செல்கின்ற மாநகர சபை பாதையும், தெற்கிற்கு ராஜித ஜயதிலக மற்றும் இன்னும் உள்ளவர்களுக்கு உரித்துடைய காணி மற்றும் குருநாகல் காலநிலை திணைக்கள அலுவலகமும், மேற்கிற்கு ராஜித ஜயதிலக மற்றும் இன்னும் உள்ளவர்களுக்குரிய காணி மற்றும் நீர்கொழும்பு வீதியும், எல்லைகளாக 07 ஏக்கர், 02 ரூட், 09 பர்ச்சஸ் ஆகும். துண்டு இலக்கம் 02. வடக்கிற்கு நீர்கொழும்பு வீதி மற்றும் போரனே தோட்ட பாதையும், கிழக்கிற்கு பிபி 7764/3A மற்றும் 7764/3B ஆகிய காணிகளும், மேற்கிற்கு நீர்கொழும்பு வீதியினால் கொழும்பு வீதிக்கு செல்கின்ற நகர சபை பாதை மற்றும் பிபி 7764/3B ஆகிய காணிகளும், மேற்கிற்கு நீர்கொழும்பு வீதியினால் கொழும்பு வீதிக்கு செல்கின்ற பாதையும், எல்லை அளவில் 02 ஏக்கர் 01 ரூட் 17.1 பேர்ச் ஆகும். மேலே உள்ள அளவு மற்றும் எல்லைகளாக காட்டப்பட்டுள்ள துண்டு இலக்கம் 01 மற்றும் 02 ஆகிய துண்டு இரண்டினதும் ஒருங்கிணைக்கப்பட்ட அளவு 10 ஏக்கரும் 01 ரூட் 26.1 பேர்ச் உடைய 4.21405 ஹெக்டயார் அளவுடைய மல்கடுவாவ பொது கல்லறையாகும்.*

*05 - 12*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விவசாயத் திணைக்களம் மேல் மாகாணம்**

*ஹோமாகம (ஆண்கள்) மற்றும் வல்பிட (பெண்கள்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் ஒரு வருட தொழிற்கல்வி விவசாயப் பயிற்சிப் பாடநெறி மற்றும் இணைந்த "துறைசார் உதவியாளர் (விவசாயம்)" தேசிய தொழில் தகைமை (NVQ4) பயிற்சி பாடநெறி 2020/2021*

மேலே குறிப்பிடப்பட்ட பாடநெறிக்காக மாணவ மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றது. இப்பாடநெறியானது சிங்கள மொழி மூலம் நடைபெறும். அத்துடன் இது விவசாயப் பிரிவில் தொழில் வாய்ப்பு, மற்றும் சுய தொழிலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்களை இலக்காகக் கொண்டது.

02. இப்பாடநெறி பிரயோக, மற்றும் எழுத்து மூலப் பயிற்சி ஒன்றாக நடாத்தப்படும். இந்தப் பாடநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் மாணவ மாணவிகளுக்கு மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் மூன்றாம் நிலைக் கல்வி, மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தேசிய தொழிற் பயிற்சி தகைமை (NVQ4) சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படும். பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு :

(NVQ4) க்கு உரியவை

1. M - 01 நிலப்பண்படுத்தல் மற்றும் மண் பாதுகாப்பு மேற்பார்வை
2. M - 02 நாற்று மேடைகளை தாபித்தல் மற்றும் பராமரிப்பு மேற்பார்வை
3. M - 03 களத்தில் பயிர்களை நடுதல் மற்றும் பராமரிப்பு மேற்பார்வை
4. M - 04 அறுவடை மற்றும் அறுவடையினைத் தயார் செய்தல் - மேற்பார்வை
5. M - 05 இயந்திர உபகரணங்கள் பாவனை மற்றும் பராமரிப்பு மேற்பார்வை
6. M - 06 நிர்வாக நடவடிக்கைகள்
7. M - 07 தொழில் பாதுகாப்பு

மற்றும் மேலதிகமாக கால்நடை வளர்ப்பு, நெற்செய்கை, மனைப் பொருளியல், தொழில் முயற்சி

மேலே கூறப்பட்ட விடயங்களினூடாக பாடங்களை சமர்ப்பிக்கும் போது புதிய விவசாய தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு உரியதாக புதிய கண்டுபிடிப்புக்கள் (உதாரணம் :- விளைச்சல் தொழில் நுட்பம், மும்முறை செய்கை முறை), சுயதொழில் உபாய மார்க்கங்கள் (உதாரணம் :- நில அளவினை ஸ்தாபித்தல், பண்ணைக் கணக்கு, பண்ணை உபகரணங்களின் பராமரிப்பு, மற்றும் உழவு இயந்திரத்தை செலுத்து வதற்கு பயிற்சி அளித்தல்) மற்றும் தகவல்களை தயாரித்தல், புதிய முறைகளுக்காக பயிற்சிகளை வழங்குதல் (உதாரணம் :- கணினிப் பாவனை) மேற்கொள்ளப்படும். அவ்வாறே மாணவ மாணவிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்த, மற்றும் தற்போதைய தேவையாகக் காணப்படும் விவசாயக் கொள்கை தொடர்பாக அறிவொன்றினைப் பெற்றுக் கொடுப்பதுமாகும்.

**03. பாடநெறியினை நடாத்திச் செல்லல்**

ஒரு வருட காலத்தைக் கொண்ட பாடநெறியானது மூன்று தவணைகளைக் கொண்டது. இரண்டாவது தவணையின் இறுதியில் அதாவது மொடியூல் பயிற்சி பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் எழுத்து மற்றும் பிரயோக ரீதியான பரீட்சை நடைபெறும். மீண்டும் (மொடியூல்) கையேடு கால எல்லையினுள் தொடர்ச்சியாக மதிப்பீடு மேற்கொள்ளப்படும். முதலாவது மற்றும் இரண்டாவது தவணையினுள் கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது தவணையில் ஒவ்வொரு மாணவ மாணவிகளும் தாம் தெரிவு செய்த விடய துறையினுள் வெளிவாரியான விவசாய இயக்கங்களுடன்/ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு கருத்திட்ட செயற்பாடொன்றினை மேற்கொள்ள வேண்டும். அவ்விடயம் பூர்த்தியானதும் எழுத்து மற்றும் பிரயோக ரீதியிலான பரீட்சை நடைபெறும். பாடநெறியில்

கலந்து கொள்வது 85% ஆக இருந்து, தொடர்ச்சியான மதிப்பீட்டின் பின் மாணவ மாணவிகளுக்கு பாடநெறியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். அவ்வாறே இந்த மாணவ மாணவிகளுக்காக மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் துறை சார்ந்த கள உதவியாளர் (விவசாயம் NVQ4) தொழில் தொழிற்பயிற்சி தகைமைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படும்.

04. **ஆட்சேர்ப்பு விதி முறைகள்** :

04.1 கல்வித் தகைமை

i. கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையில் (சா./த.) சிங்கள மொழி (மொழி மற்றும் இலக்கியம்), கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வியும் தொழில்நுட்பமும் (விவசாயம், தையல் வேலை, வீட்டுத் தோட்டம், மனையியல், வர்த்தகமும் கணக்கியலும், மோட்டார் கைத்தொழில்) ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

04.2 பிற தகைமைகள்

i. எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பம் கோரப்படும் தினத்தில் 17 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

ii. விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.

iii. பிரயோக ரீதியிலான விவசாய செயற்பாடுகளில் ஈடுபட சிறந்த உடல் தேகாரோக்கியம் பெற்றவராக இருக்க வேண்டும். (இதனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்திய உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்று பாடநெறியின் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

iv. தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

v. விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நபர்கள் மற்றும் அதனை தொழில் ஒன்றாகக் கொண்டு செல்வதற்கு ஆயத்தமாக உள்ளவர்கள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்படும்.

vi. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன் உள்ள மூன்று வருடங்களுள் ஆகக் குறைந்தது இரண்டு வருடமாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசித்துள்ளார் என்பதற்கு வசிக்கும் பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழினால் உறுதிப்படுத்த வேண்டும்.

**இதற்கு மேலதிகமாக**

கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தில் வசிக்காத நபர் ஒருவர் பாடநெறியைக் கற்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்தால் அவருக்கும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். எவ்வாறான போதும் விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்யும்போது மேல் மாகாணத்தில் வசிப்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மேல் மாகாணத்தில் வசிப்பவர்களிடமிருந்து போதிய அளவு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாதவிடத்து வெளி மாவட்டங்களின் விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

05. **பாடநெறிக்குரிய ஊக்குவிப்புப் படி**

i. பயிற்சிக் காலத்தினுள், பயிற்சி நடவடிக்கைகளில் பங்குபற்றும் ஒருவருக்கு ரூபா ஐந்நூறு (500.00) பயிற்சி நெறி ஊக்குவிப்புப்படி செலுத்தப்படுவதுடன் அது உணவுப் பானங்களுக்காக செலவு செய்ய வேண்டி ஏற்படும்.

ii. பயிற்சி பெறும் காலத்தினுள் எல்லா மாணவருக்கும் கட்டணமின்றி விடுதி வசதி வழங்கப்படும்.

06. **பாடநெறியில் கலந்து கொள்ளும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள்**

i. ஆயிரம் ரூபாய் (1000.00) வைப்பாக வைக்க வேண்டும்.

ii. பயிற்சியின் பின்னர் விவசாயத்தில் ஈடுபட அடிப்படை வசதிகள் சிறு அளவேனும் இருக்க வேண்டும்.

iii. பயிற்சியின் பின்னர் அரசாங்க சேவையில் வேலை ஒன்றை வழங்க, மேல் மாகாண சபையோ மத்திய அரசோ உடன்பட வில்லை என்பது விஷேடமாக வலியுறுத்தப்படுகின்றது.

iv. பயிற்சிப்பாடநெறி நடைபெறும் காலத்தினுள் ஸ்தாபனத்தினால் பேணப்படும் பொதுச் சட்டதிட்டங்களுக்கு இணங்குவதாக எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

v. பயிற்சிப் பாடநெறி நடைபெறும் காலத்தினுள் ஒழுக்கமின்மை மற்றும் சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்பட்டால் அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்கு அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

07. இங்கு கீழே காணப்படும் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 8 1/2x12 (A4) அங்குல அளவிலான கடதாசியில் இரண்டு பக்கங்களை உபயோகித்து 2020 யூலை 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "மேல் மாகாண விவசாயப் பணிப்பாளர் (மேல் மாகாணம்), மாகாண விவசாயப் பணிப்பாளர் காரியாலயம், 07 ஆவது மாடி, இலக்கம் 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல," என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2020 - 2021 ஆம் ஆண்டுக்கான ஒரு வருட தொழில் பயிற்சி விவசாயப்பாட நெறிக்கான விண்ணப்பப் படிவம்" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
மேலதிக தகவல்களை பெற http://agridept.wp.gov.lk வலைத்தளத்திலிருந்து பெறவும்.

i. ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவு மேல் மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு உரியதாகும்.

ii. ஒழுங்கற்ற தவறான விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

iii. தற்போது பாடசாலையில் இருந்து விலகிச் சென்றுள்ள மாணவ மாணவிகள் ஆர்வம் காட்டுகின்றபடியால் நேர்முகப் பரீட்சையின் போது பாடசாலையை விட்டு விலகிச் சென்ற சான்றிதழ் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iv. தாம் கல்வி பயின்ற பாடசாலை மற்றும் பிரதேசத்தின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவரிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு சான்றிதழ்கள், கல்வித் தகைமை மற்றும் வேறு தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

v. தேசிய அடையாள அட்டையுடன் கல்விச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உத்பலா அமரகோன்,
மாகாண விவசாயப் பணிப்பாளர்
(மேல் மாகாணம்)

மாகாண விவசாயப் பணிப்பாளர் காரியாலயம் (மேல் மாகாணம்),
07 ஆவது மாடி,
இலக்கம் 204,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.
2020, மே 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹோமாகம (ஆண்கள்) மற்றும் வல்பிட (பெண்கள்) மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்களில் ஒரு வருட தொழிற்கல்வி விவசாயப் பயிற்சி பாடநெறி மற்றும் இணைந்த "துறைசார் உதவியாளர் (விவசாயம்)" தேசிய தொழில் தகைமை (NVQ4) பயிற்சிப் பாடநெறி 2020/2021 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளுதல்**

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : -

.................................................................................................................................

.................................................................................................................................

2. முதலெழுத்துடன் பெயர் : -

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

3. (i) நிரந்தர முகவரி :-

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(ii) வதிவிட மாவட்டம் :-

.................................................................................................................................

4. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) : -

5. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-

6. (i) நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :-

(ii) வதிவிட மாவட்டம் :-

(iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-

(iv) இல்லத் தொலைபேசி இலக்கம் :-

(v) ஈமெயில் (Email) :- ..........

7. பால் - (பொருத்தமான கூட்டில் "√" குறியினை இடவும்)

பெண் - ☐ ஆண் - ☐

8. பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :

(i) தேசிய அடையாள அட்டை இல. :

(ii) அடையாள அட்டை வழங்கிய ஸ்தாபனம் மற்றும் திகதி :
..........
..........

09. தந்தை அல்லது பாதுகாவலர் பெயர் :
..........
..........

10. தந்தை அல்லது பாதுகாவலர் முகவரி :
..........
..........
..........

11. கல்வித் தகைமை :
(அ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சை (..........ஆண்டு)

(முதலாவது அமர்வு)

| இல. | பாடம் | தரம் | இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

(ஆ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சை (...................................ஆண்டு)

(இரண்டாவது அமர்வு)

| இல. | பாடம் | தரம் | இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

(இ) கல்விப் பொதுத்தராதர (உயர் தர) பரீட்சை (...................................ஆண்டு)

| சித்தியெய்திய பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

12. பிற தகைமைகளும் வெளி ரீதியிலான செயற்பாடுகளும்

(i)
(ii)
(iii)

13. நீங்கள் உயர்கல்வி நிறுவனம் ஒன்றிலோ தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றிலோ/ஸ்தாபனம் ஒன்றிலோ பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீரா? அப்படியாயின், அது தொடர்பான விபரத்தைக் குறிப்பிடுங்கள்.

மேலே கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவதொரு தகவல் பொய்யானதென என்னைத் தெரிவு செய்த பின் வெளியாகினால் எந்தவொரு விசாரணையுமின்றி எனது பயிலுநர் நிலைமை இரத்தாகும் என்பதனையும் அறிவேன்.

......................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .................................

05 - 01

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.